இவ்வாண்டில் அனைவரும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வத்துடன் நலமுடன் வாழ இறைவனை பிராத்திக்கின்றோம்.

பத்தாம்வகுப்பு மற்றும் +2 வகுப்பு தேர்வுகள் நடந்து முடிந்துள்ளன. மதிப்பெண் பட்டியல் வந்ததும் மாணவ, மாணவியர் பட்டியலின் நகல் மற்றும் பாஸ்போர்ட் சைஸ் படம் விலாசத்துடன் தலைமை சங்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.

கோவை மாநகரில் 14.02.2010 அன்று கோவை கிளைச் சங்க நிர்வாகிகள் “பொந்தில் சமுதாய குழந்தைகளுக்கான எதிர்கால கல்வி” குறித்த கருத்தரங்கினை புதுமையான முறையில் ஏற்பாடு செய் திருந்தார்கள்.

விழாவினில் மாநில தலைவர், R. பாபு கோவிந்த் சிங் தலைமையுரை ஆற்ற, பொது செயலாளர் M.B. கிருஷ்ணா சிங் சிறப்புரையுடன் விழா துவங்கியது.

விஞ்ஞானி Dr. B. குருதேவ் சிங், M.Sc., Ph.D., அவர்கள் தனது உரையில் குழந்தைகள் விருப்பப்பட்டு எந்த பாடத்தை படிக்க விரும்புகின்றர் என்பதை அறிந்து, அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். படிப்பில் முழு சுதந்திரம் வழங்க வேண்டும் என்றார்கள்.

திரு. N. சதீஷ் குமார் சிங், M.Sc., Asst. Commr. of Income Tax அவர்கள் குழந்தைகளுக்கு மன அழுத்தம் கொடுக்காமல் படிக்க விடவும் என்றார். திரு. S. மனோகர் சிங், M.B.A.,கோவை அவர்கள் தனது உரையில், மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களின் பங்கு என்ன, என்பதனை பற்றி விவரமாக எடுத்துரைத்தார்கள், குழந்தைகள் நல்ல முறையில் வளர தாயின் பங்களிப்பு மிக மிக அவசியம் என்றார், செய்யக்கூடாதவைகளை செய்யாமல் இருப்பது மிகச் சிறந்தது என்றார். அவரது ஆழ்ந்த கருத்துக்கள் எல்லோரையும் சிந்திக்கவைத்தது.

திரு. S.யுவராஜ் சிங், B.A., B.L., திரு. H. ஹரீஷ் சிங் B.Sc., PGDCA., PGDBA அவர்கள் இன்றைய கல்வி முறையினைப்பற்றி எடுத்துரைத்தார்கள்.

திருமதி. பிரேமா பாபு கோவிந்த் சிங் அவர்கள் பேசும் போது, பெற்றோர்கள் பெண்ணை வெகு சிரமப்பட்டு, செலவுகள் செய்து நல்ல படியாக திருமணம் செய்து தந்தால் மட்டும் போதாது அவர்களின் எதிர்கால வாழ்வில், பெண்ணின் பெற்றோர்கள் குறுக்கீடு செய்யாமல் இருந்தாலே போதும் அவர்கள் வாழ்வும் செழிக்கும், அவர்களுக்கு பரிபூரண இறையருளும் கிடைக்கும் என்றார்கள்.

பெண்கள் மற்றும் குழுந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. கோவை கிளையின் பிதா மகர் திரு. B. அர்ஜுன் சிங், வயது முதிர்வு இருந்த போதும் விழாவிற்கு வந்திருந்து ஆசி வழங்கினார்கள். கோவை கிளை நிருவாகிகள் விழாவினை சிறப்பாக நடத்தினார்கள். வந்திருந்தோர் அனைவருக்கும் இரவு விருந்தினை வழங்கி கௌரவித்தார்கள்.




விழா நாயகர்கள்



விழாவில் கலந்து கொண்டவர்கள்

அதிகமாக பேசினால் அமைதியை இழப்பாய்



# क्षत्रिय कुल परिचायिका प्राक्कथन

बिसेन वंश के चौरासीवों शासक भीममल्ल(1311-1360 ई0)ने गोरखपुरस जिले में मझोली राज्य की स्थापना की । बिसेन वंश के नब्बेवें शासक रघुवंश मल्ल के द्वितीय पुत्र रुपमल्ल ने प्रतापगढ़ जिले में कालाकांकर राज्य की स्थापना की । कालाकांकर राज्य के राजा दिनेश सिंह पं0 जवाहरलाल नेहरु से इन्दिरा गांधी के समय तक केन्द्रीय मन्त्री रहे । बिसने वंशज के पिच्चानवें शासक देनमल्ल के द्वितीय पुत्र माधवमल्ल ने मऊ जिले में मधुवन व तृतीय पुत्र रायमल्ल ने गोरखपुर जिले में नरहपुर राज्य की सर्स्थापना की ।

मझौली राज्य के शासक नृपमल्ल के छोटे प्रत्र राजकुमार प्रतापमल्ल ने गोंडा राज्य की स्थापना की । आगे चलकर गोंडा राज्य के शासक रामसिंह के द्वितीय प्रत्र भवानी सिंह ने भिनगा राज्य की स्थापना की । राजा भवानी सिंह की पाँचवीं पीढ़ी में राजा शिवसिंह हुए जो उच्च कोटि के साहित्यकार थे । राजा शिव सिंह ने अमर कोष और अद्भुत रामावण का हिन्दी अनुवाद कीया था ।

1857 ई0 के स्वतन्त्रता संग्रम में गोरखपुर जिले में बरहज के पुर्व में नदी किनारे बसे पैना गाँव के बिसेन क्षत्रियों की अलग ही पहचान बनी । गांववासियों ने अंग्रेजों की रसद लूटी तथा नदी में डुबा-डुबा कर मारा । 31जौलाई 1857को अंग्रेजों ने थल एवं जल दोनों प्रकार की सेना लेकर पैना गांव पर आक्रमण किया, लेकिन छः सौ राजपूत वीरों ने अंग्रेज सेना को पीछे खदेड़ दिया । लेफ्टिनेण्ट पूल्लन, ब्रिगेडियर डगलस और कर्नल रुक्रापट के साथ गोरखा फौज के आ जाने पर गांव वाले मुकाबले में टिक नही पाये । ठाकुर अजरायल सिंह, अयोध्या सिंह, परम दयाल सिंह के नेतृत्व में हजारों गांववासी शहीद हो गये क्षत्राणियों ने नदी में कूद कर तथा अग्नि में भस्म होकर चित्तौड़ के जौहर को पैना गांव में पुनः दोहरा दिया । इमलाखाएँ -

**Courtesy : Chetak Vahini**

Contd.........



அன்னதானம் வழங்கும் செல்வன் **B. ஆதித்யா பாலாஜி சிங்,**

### ஸ்ரீ ராம நவமி மகோற்சவம் - 2010 கடலூர்

இவ்வாண்டு ஸ்ரீராம நவமி விழா 24.03.2010 அன்று கடலூர் மாநகரில் கேரளாவின் சிறப்பு வாத்தியம் செண்டை மேளம், வேட்டு, வாண வேடிக்கையோடு ஸ்ரீ கோதாண்டராமர், சீதா பிராட்டி, லஷ்மணர், ஆஞ்சநேயர் போன்ற விக்ரகங்களுக்கு திருமஞ்சனம், திருகாப்பு புஷ்ப அலங்காரங்களும் செல்வன் **B. ஆதித்யா பாலாஜி சிங்,** G/s of Dr.**ராமகிருஷ்ண சிங்ஜி** தனது திருக்கரங்களால் வந்திருந்தோருக்கு அன்னதானம் வழங்க, விழா வெகு சிறப்பாக நடை பெற்றது.

மாலையில் திருமதி ஜெய ஸ்ரீ இரகுராமன் அவர்களுடைய தேனினும் இனிய குரலால் சீதா கல்யாணம் பற்றிய உபன்யாசம் நடை பெற்றது.

இவ்வாண்டின் சிறப்பு அம்சம் என்னவென்றால் கோரளாவின் சிறப்பு வாத்தியம் செண்டை மேளம். இந்த மேள வாத்தியகுழுவினர் சென்னையிலிருந்து சென்று கடலூரில் செண்டை மேளம் வாசித்தார்கள். இவ் இசையினை காண பக்தர்கள் திரளாக வந்திருந்து கண்டு களித்தனர்.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் Dr. M. இராம கிருஷ்ணா சிங், திருமதி. பிரேமா இராமகிருஷ்ணா குடும்பதினர் எவ்வித குறையுமின்றி நீடூழி வாழ்ந்து ஸ்ரீ ராமநவமி மகோற்சவத்தினை தொடர்ந்து வழிவழியாக நடத்தி இறைவனின் அருளைப் பெற சமுதாயத்தவர் சார்பாக வாழ்த்துகிறோம்.

ஏராளமான பக்த கோடிகள் உற்சவத்தில் பக்தி சிரத்தையுடன் கலந்து கொண்டு ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமியின் திருவருளுக்கு பாத்திரமாயினர்.

(அட்டைப்பட செய்தி)

### அவசரம் - அவசரம்

மத்திய அரசால் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி ஜாதி வாரியாக எடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளதால் கணக்கெடுப்பு எடுக்க வரும் அலுவலர்களிடம் பொந்தில் ஜாதி என தவறாமல் குறிப்பிடும்படி நமது சமுதாயத்தவர்களை கேட்டுக் கொள்கிறோம்.

### Attention to Members

Govt. of India have ordered to take census community wise. Members are requesed to inform the census officials and record the community as Bondil.

### மாணவர்களே அறிந்து கொள்வீர்

அரசாணை எண்.28, சமூக நலத்துறை, நாள்.19.07.1994 வரிசை எண்.12-ன் படி பொந்தில் சமுதாயம் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் ஆகும். ( மத்திய அரசு, சமூகநலத்துறை தீர்மான எண். 12011 / 68 / 93 BCC (C) Dt. 10.9.1990) சமுதாய மக்கள், பள்ளி / கல்லூரியில் சேர இதனை பயன்படுத்திக் கொள்ளவும்.

### Attention to Students

As per G.O. No.28, Social Welfare Department Dt. 19.7 1994 vide SI.No. 12, Bondil Community is Backward Class. (Govt. of India Ministry of Welfare Resolution No.12011/68/93 BCC(C) Dt.10.9.1990) Students are requested to avail the concessions from the Government without fail.

பொந்தில் சங்கம் தலைவர் அவர்களுக்கு V.J. ரகுபீர் சிங், 9-A, திருவள்ளுவர் நகர் திருமுல்லைவாயில், சென்னை எழுதியது. என்னுடைய மகள் திருமணம் திருமுல்லை வாயிலில் 03.06.2009 அன்று நடந்தது பொந்தில் இதழில்பெயர் பதிந்திருந்ததால் திருமணம் நடந்தது. இதற்கு பொந்தில் சங்கத்திற்கு நன்றி.

### திருத்தம்

ஜனவரி, 2010 இதழ் பக்கம் 11ல் வெளியான மாணவ / மாணவியர்க்கு நல்வாழ்த்துகள் பகுதியில் வரிசை எண் 13ல் உள்ள பெயரினை **P.பரத்குமார் சிங்,** S/o. **K. பார்த்திபன் சிங்** என்று திருத்தி படிக்கவும்

***வேகமாக பேசினால் அர்த்தத்தை இழப்பாய்***

## ஸ்ரீ சத்திய நாராயண ஸ்வாமி பூஜை

சென்னையில் தலைமைச் சங்கத்திற்கு சொந்தமாக உள்ள காலி மனையில் கட்டிடம் கட்டிட வேண்டியும் நாட்டு மக்களின் துயரம் களைந்து வாழ்வில் சௌபாக்கியம் கிடைத்திட வேண்டியும் 4.10.2009 அன்று சென்னை மேற்கு மாம்பலம், போஸ்டல் காலனி 4வது தெருவில் அமைந்துள்ள மறைந்த பெரியவர் திரு. N.டீக்கா சிங் அவர்கள் இல்லத்தில் ஸ்ரீ சத்திய நாராயண ஸ்வாமி பூஜை வெகு விமரிசையாக நடைபெற்றது. திரு. L. இரஞ்ஜித்சிங் IPS. (ஓய்வு) அவர்கள் பூஜையினை ஆரம்பித்து வைத்தார்கள். பூஜை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் திருமதி. சம்யுக்தா டீக்கா சிங் மற்றும் அவர் குடும்பத்தார் எவ்வித குறையுமின்றி மன நிறைவோடு செய்து கொடுத்தார்கள் வந்திருந்தோர் அனைவருக்கும் மதிய உணவு பரிமாறப்பட்டது. பூஜைக்கான செலவு மற்றும் மதிய உணவு வழங்கியது வரையிலான செலவு முழுவதும் திருமதி. சம்யுக்தா டீக்காசிங் குடும்பத்தினர் மகிழ்வுடன் ஏற்று சிறப்பாக செய்து தந்தார்கள் அவர்களுக்கு நமது சங்கத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். நமது சமுதாயத்தவர்கள் ஏராளமாக கலந்து கொண்டு இறைவனின் அருளாசியினை பெற்றார்கள்.

## ஹோலிப் பண்டிகை

ஹோலி என்றால் மகிழ்ச்சி, பாசம், அன்பு இது வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தும் திருவிழா 28.02.2010 அன்று சென்னை கோடம்பாக்கம் ஆண்டவர் நகர் 3வது தெருவில் வசிக்கும், திரு. மனோஜ் கிருஷ்ணா அவர்களை தொடர்பு கொண்டபோது மன மகிழ்வோடு ஹோலி பண்டிகையினை நடத்திட இடம் கொடுத்து வந்திருந்தோர் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கி கௌரவித்தார்கள். சரியாக மாலை 6 மணிக்கு திருமதி. B. பிரேமா பாபு கோவிந்த் சிங் பூஜை செய்து, வந்திருந்தோருக்கு வண்ணம் பூசி மகிழ்ச்சியினை பரிமாற்றம் செய்து விழாவினை தொடங்கிவைத்தார்கள்.

மாநில தலைவர் திரு. R.பாபு கோவிந்த் சிங், பொது செயலாளர் M.B. கிருஷ்ணா சிங், திரு.H.B. லோக்மான் சிங் தென் சென்னை கிளை தலைவர். திரு. M.B. துல்ஜாராம் சிங் கிளை செயலாளர் ஹோலியின் சிறப்பினை எடுத்துரைத்தார்கள். திரு. B. ஜெய்பால் சிங்.

கிளை பொருளாளர், நிதி நிலையை வாசித்தார். T.L. ராம் சந்தர் சிங், K.விஜயகுமார் சிங், வட சென்னை கிளைசார்பாக கலந்து கொண்டனர். திரு. M.B. கிருஷ்ணா சிங் நன்றி கூற விழா இனிதே முடிவுற்றது.

கோவையில் இவ்வாண்டும் ஹோலிப்பண்டிகை சிறப்புடன் கொண்டாடப்பட்டது. உறுப்பினர்களின் இல்லங்களுக்கு சென்று வண்ணப் பொடியினை தூவி மகிழ்சியினை பரிமாறிக் கொண்டார்கள். கிளை செயலாளர் V.சுரேஷ் பாபு, S.யுவராஜ் சிங் ஹாரிஷ், மற்றும் கிளை நிருவாகிகள் சிறப்பாக ஏற்பாடுகள் செய்திருந்தனர்.



கோவையில் R.S. புரம் மேற்கு திரு. வெங்கிட சாமி ரோட்டிலுள்ள அருள்மிகு ஸ்ரீ காமாட்சியம்மன் திருக்கோயிலில் 28.04.2010 மாலை 3.30 மணி அளவில் சித்ரா பௌர்ணமியன்று ஸ்ரீ சத்ய நாராயண ஸ்வாமி பூஜை வெகு சிறப்புடன் நடை பெற்றது, பூஜைக்கு வந்திருந்த அணைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது, பூஜை ஏற்பாட்டினை கோவை கிளை நிருவாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

*அலையும் மனதை ஆண்டவனிடம் நிலை நிறுத்திப் பழகுங்கள்*

## BONDIL ASSOCIATION (H.Q)

New No.38, Old No.40, Kuppumuthu Street, Triplicane, Chennai-600 005. Ph No:28611313

## NEW EXECUTIVE MEMBERS ELECTED AT G.B. HELD ON 27th December 2009

| | | |
|---|---|---|
| Patron | | G. Balaji Singh, 348,(12) Triplicane High Road, Chennai-600 005. Cell. 9840832872 |
| 1.President | 1. | R. Babu Govind Singh, 13-A: Teachers Colony, V.M. Street, Chennai-14. Cell: 9444070048, |
| 2. Vice Presidents | 1. | B. Jayachandra Singh, 32, Arulambal street, T.Nagar, Chennai-600 017. Cell:98400 25942. |
| | 2. | R. Kesava Singh, New No.41, Old No.17/A, Aziz Nagar, 1$^{Sl}$ Street, Kodambakkam, Chennai-600 024 Ph:24830543. |
| | 3. | M. Sundar Singh, 27, Bangaru Naicken Street, Chennai-600 002. Cel!:9884051210 |
| | 4. | T.L. Ramchandra Singh, 43, V.Main Road, Jawahar Nagar, Agaram, Chennai-600 082. Tel:26700114, Cell : 9444611815 |
| 3.General Secretary | | M.B. Krishna Singh, 2 Seven Hill, 50, Poonamallee Road, Ekatuthangal, Chennai-600 097. Ph: 22252818 Cell:9940217113. |
| 4. Joint Secretary | | R. Nagaraj Singh, 80/31, P.V.Koil 1$^{sl}$ Street, Pudupet, Chennai-600 014. Cell: 9444333162 |
| 5. Treasurer | | R.G Rajender Singh, 15 SMV Koil Street, Triplicane, Chennai - 600 005 Cell: 9840203565 |
| 6. Joint Treasurer | | R. Prem Narayan Singh, No. 53/2, Appavoo Street, Chennai - 2, Cell : 9444274665. |
| 7. Assistant Secretaries | | M.R. Kumar Singh, 7 Nallana Pillai Street, Kosapet, Vellore-632 001. Cell:9443623495 |
| | | B. Jai Singh, Meena Apt, No. 41, Appu Street, Chennai-4, Cell : 9444304062. |
| 8. Women's Wing Secs. | | Mrs. Leeavathy Sunder Singh, AP.1702, 103, 14$^{tn}$ Sector, K.K.Nagar, Ch-78. Ph:24727914. |
| | | Mrs. Prema Babu Govind Singh. 13A,Teachers Colony, VM.Street. Royapettah, Chennai-14 |
| 9. Legal Advisor | | S.Yuvaraj Singh, BABL., No.74, Subramaniyam Road, R.S.Puram, Coimbatore - 641 002. Cell : 9442076884 |
| 10. Executive Members | | T Yuvaraj Singh, No. 9, Dharmaraja Koi! Street, Alandur, Chennai - 16, Cell : 9841227214. |
| | | K.Amarnath Singh, 40 Kuppu Muthu Street, Ground Floor, Triplicane, Chennai-600 005. Cell: 9500039189 |
| | | K. Shankar Singh, 15, Choolai Medu High Road, Chennai-94, Cell: 9884020987 |
| | | H.B. Lokman Singh, 17/9. VI St., Andavar Nagar, Kodambakkam, Chennai-600024. Ph:24819853 Cell:9884348938 |
| | | M.B. Thuljaram Singh, No.114, 5$^{lh}$ Cross Street, Sai Nagar, Virugambakkam Chennai-92. Res:65162565, Cell: 9445235271 |
| | | T.C.Mohan Singh, 7.K.K. Road, 3$^{rd}$ Cross, S.G. Apartment, Ambathur P.O. Chennai-600 053. Cell: 9840703612 |
| | | K. Vijayakumar Singh, Plot No.2, Ponnusamy Nagar, 100. Feet Ring Road, Near High Road, Kolathur, Chennai-600099. Cell:9884611890 |
| | | G.Bhagavath Singh, 9/5, 45$^{lh}$ Street, Nanganallur. Chennai-600061 Cell -9003161423. |
| | | S.Inder Singh, 258, Old GST Road, Irumbuliyur, Chennai-600059. Tel:22376166 |
| | | B. Jaipal Singh, No.6, Santhi Nagar, No.88, Veppampattu, Thiruvallur Dt, 602024 Cei!:9841766816 |
| | | E. Hari Singh, 339/55, Sri Anna Poorana Sweets, Thiruthani Bus Stand. Code-631209 Ph: 044-27881993, Cell -9380977655. |
| 11. Zonal Secretary | | B.Arjun Singh, 155, Murugaiya Thever Colony.Bharathi Nagar, 6th Street, Ramanathapuram Coimbatore-641045. Tel:422-2310858 |
| | | M.Rajaram Singh. No.3/58, Pandi Nagar, 1st Street. Moondru Mavadi, K.K.Pudur Madurai Cell: 9976741405 |
| 12. Internal Auditor | | Dr. M.Govardhan Singh, A.P. 1702, 1O3$^{rd}$ Street, 14$^{lh}$ Sector. K.K. Nagar, Chennai-78 Cell : 9444020232. |

*பட்டற்ற வாழ்வு வாழ முயற்சி செய்யுங்கள்*

## உத்திரக்கிரியை

இன்றைய அவசர உலகத்தில் உள்ள மக்கள் 100க்கு 90பேர் இயந்திரத்தை போன்று பணிபுரிந்தாலும் மனமகிழ்ச்சி இன்றி துன்பத்திலேயே உழல்கின்றனர். காரணம் என்ன, என்று சிந்திப்பதற்கு கூட போதிய அவகாசம் இல்லை, நம் குடும்பத்தில் உள்ள பெரியோர் காலமாகும் போது அவர்களின் இறுதி யாத்திரை எப்படி செய்ய வேண்டும், அதற்கு பின் எப்படி காரியங்கள் செய்ய வேண்டும் என்பதை மறந்து, உடனடியாக அலுவலகம் செல்ல வேண்டும் என்ற ஒரே நோக்கோடு, அவசர அவசரமாக செய்தும், செய்யாமலும் இருப்பதே இதற்க்கு தகுந்த காரணங்கள் ஆகும், எல்லோரும் நலமுடன் வாழ பித்ருக்களுக்கு செய்ய வேண்டிய கடைமைகளை முறையாக, எப்படி செய்ய வேண்டும் என்று அறியும் வண்ணம் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது. அதன்படி செய்து நலமுடன் வாழ இறைவனை பிராத்திக்கின்றோம்.

இறந்தபிறகு சொர்க்கம் இருக்கிறதோ இல்லையோ? அது விவாதத்திற்கு உரிய விஷயம். நிலைமை அப்படி இருக்க இறந்த பிறகு உடலுக்கும் இறந்தவரின் ஆத்துமாவிற்கு, இருக்கும் ஆத்மாக்கள் (மனிதர்கள்) பல சடங்குகள் எல்லா மதங்களிளும் செய்யப்பட்டு வருகிறது காரணம் உயிருடன் இருக்கும் மனிதன் தன்னுடைய ஆத்ம திருப்திக்காக நன்றிக் கடனை இறந்த உடலுக்கு மரியாதை செலுத்தும் வகையில் சடங்குகளை தாங்கள் இருக்கும் இடத்திற்கு தக்கவாறு தங்களுடைய மதக் கொள்கைப்படி இறந்தவரின் உடலுக்கு உரிய சடங்குகள் செய்து இல்லத்தில் உள்ள நெருங்கிய உறவினர்கள் சில முறைகளை அனுசரிக்க வேண்டி உள்ளது. இதனால் நமக்கு இயற்கையாவும் விஞ்ஞானஅடிப்படையிலும் மன திருப்தியும் சில பயன்களும் பெற முடிகிறது. இருப்பினும் காலபோக்கில் நாம் நமது சடங்குகளை நம் மூதாதையர்கள் சொல்லி வைத்தபடி முறையாக செய்யத் தவறியதிற்கு காரணம் சரியாக அறிந்து கொள்ளாமையே இதனால் சடங்குகள் இடத்திற்கு இடம் பலவித மாற்றங்களுடன் செய்யப்பட்டு வருகிறது. மேலும் நமது சமூகத்தில் உள்ளவர்கள் பரவலாக இருப்பதும் ஒரு காரணம்.

நமது சமுகத்தினர் வைகுந்த பதவி அடைந்தவுடன் செய்ய வேண்டிய உத்திர கிரியைகள் செய்ய வேண்டிய முறையினை இவ்விதழில் பிரசுரிக்கின்றோம். இக்கட்டுரை நமது இறுதியாத்திரையைப் பற்றியதாகும். பிறக்கும் போதும் அழுகின்றான். மனிதன் இறக்கும் போதும் அழுகின்றான்.

உலகத்தில் நாம் பிறப்பது சில கடமைகளை செய்யத்தான். அவை முடிந்ததும் நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கு செல்ல தயாராக இருத்தல் வேண்டும் அதில் துக்கம் என்பதற்கு இடமே இல்லை. நமக்கு வேறு பணி தயாராக உள்ளது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

ஆதலால் நமது ஆத்மா பூதவுடலை விட்டு பிரிந்து அமர லோகம் சென்ற பின் அவ்வுடலுக்கு கீழே கூறியபடி கிரியைகளை க்ஷத்திரிய தர்மப்படி செய்ய வேண்டும். இறந்தவர்களின் உடலை பூஜிக்கும் வகையில் குத்து விளக்கு ஏற்றி தேங்காய் உடைத்து தலையருகில் வைக்க வேண்டும். தலை வடக்கு பக்கத்தில் இருத்தல் வேண்டும். ஆண் என்றால் வலது பக்கத்திலும் பெண் என்றால் இடது பக்கத்திலும் தற்பையின் மீது பச்சரிசி கொஞ்சம் போட்டு தாம்பூர அல்லது பித்தளை செம்பில் நீர் நிரப்பி வைக்க வேண்டும்.

இறந்தவரை குளிப்பாட்டுவதற்க்கு முன்பு கொள்ளி வைப்பவர் சவரம் செய்து குளித்து பின் புரோகிதர் மூலம் கரும செய்த பின் பித்தளை செம்பில்உள்ள நீரை எடுத்து இறந்தவர் உடலில் தெளித்து மூன்று முறை வலம் வந்து பின்இறந்தவரை குளிப்பாட்டல் வேண்டும். உடலில் எண்ணெய், சீயக்காய் தேய்த்து குளிப்பாட்டி மாலை அணிவித்து பேரக்குழந்தைகள் நெய் பந்தம் பிடிக்கச் செய்து வாசனைதிரவியங்கள் ஊற்றி வேஷ்டி, புடவை, ரவிக்கை அணிவிக்கவும். அதன் பின் மோட் துணிகீழிருந்து மேல் வரைக்கும் முகத்தை விட்டு மூடவும். உடலை வெளியே எடுத்து வர வேண்டும் . இறந்தவர் உடலை மயானத்திற்து எடுத்துச் செல்ல வைக்கோல் மூலம் செய்வித்த பாடையில் உடலை வைத்து பின் உடலின் மீது சிகப்பு சில்க் ( டபேடா ) துணி போர்த்தி மலர் தூவி கொள்ளி வைப்போர் இறந்தவர் உடலின் காலடியில் கற்பூரம் ஏற்றி மூன்று முறை வலம் வந்து அலங்கரிக்கப்பட்ட அவ்வுடலை "ராம் நாம் ஸத்ஹை ஸப் கோ யஹி கத் ஹை " என்று ராம நாமத்தை கூறிய வண்ணம் உடலை மயானத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும் கால்கள் முன்பக்கதில் இருக்கும் வகையில் பாடையினை எடுத்துச் செல்ல வேண்டும்.

கருமம் செய்வோருக்கு மல் துணியில் ஒரு வேஷ்டியும், அதே துணியில் அங்க வஸ்திரமும் பூணூல் ஒன்றும் ஒரு கோமணத்துணியும் தயார் செய்து கொள்ள வேண்டும். இவைகளை (துஸ்வி) 10-ம் நாள் நிகழ்ச்சி வரை அணிந்து பின் நாவிதனுக்கு கொடுக்க வேண்டும். இந்நிகழ்சிகளில் ஒரு பித்தளை டம்பளர் மற்றும் ஒரு ஆணி வைத்திருக்க வேண்டும். முதலில் தூக்குபவர்கள் மயானம் வரையில் தோள் கொடுக்க வேண்டியது இல்லை. மற்றவர்களும் தோள் கொடுக்கலாம். முதலில் தோள் கொடுத்த நால்வர் மாத்திரம் இறுதியில் தோள் கொடுத்து இறக்கி வைக்க வேண்டும்

மயானத்தின் வாயில் வந்ததும் பிரேதத்தை கீழே இறக்கி ஓர் பிண்டத்தையும் மூன்று பக்கத்திற்கு மூன்று வெற்றிலையும் காசும் வைத்து பிரேதத்தின் தலை சுடுகாடு பார்க்கும் படி உள்ளே எடுத்துச் செல்ல வேண்டும். சிறு வயது குழந்தைகயையும் பாலகர்களையும் அடக்கம் செய்ய வேண்டும். 14 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் ஆகியோரை தகனம் செய்ய வேண்டும்.

தகனம் செய்யும் இடத்தில் கட்டைகளை அடுக்கி ஆண் என்றால் ஆகாயத்தை பார்க்கும் படியும் விதவைப் பெண்களுக்கு மட்டும் கைகளை பின்னுக்கு வைத்து பெண் என்றால் முகம் பூமியை பார்க்கும் படி வைத்து உடலின் மீது கட்டைகளை அடுக்க வேண்டும். சந்தனக்கட்டையும் சேர்த்து வைக்க வேண்டும். கொள்ளி வைப்போர் மூன்று முறை வலம் வந்து ஆண் என்றால் தலை பாகத்திலும் பெண் என்றால் கால் இடமும் கொள்ளிவைத்திடல் வேண்டும்.

நெருப்பு நன்கு பற்றியவுடன் ஓர் மூங்கிலை எடுத்துக் கொண்டு அதை கருமஞ் செய்வோர் கையில் கொடுத்து கபாலம் வெடித்ததும் மூங்கில் வழியாக நெய், தேன், எள் சேர்த்து அதன் வழியாக கபாலத்தில் விட்டு பின்னர் ஒரு மண் பாணையில் தண்ணீர் நிரப்பி தோளில் சுமந்து சிதையை சுற்றி வர வேண்டும். ஒவ்வொரு முறை சுற்றி வரும் போதும் மண்பாணையில் கல்லால் ஓர் துவாரமிட்டு மூன்று முறை ஆனபின் மண் பாணையை பின்னால் விட்டு விட்டு திரும்பி பார்காமல் போக வேண்டும்.

.இறந்தவர் வீட்டுற்கு வந்து வெளியே இருக்கும் நீரில் கால் அலம்பி, தீப தரிசனம் செய்ய வேண்டும் வாயில் உப்பு மிளகு போட்டு சிறிது நேரம் வைத்திருந்து வெளியே வந்ததும் துப்பிவிட வேண்டும்.

**பால் நிகழ்ச்சி :**

இறந்த 3-ம் நாள் செய்யும் நிகழ்ச்சி இது. ஒரு தாம்பாளத்தில் இறந்தவர் ஆவலோடு உண்ணும் உணவு வகைகள், பழம் முதலியவற்றை வைத்து அன்னாரது உருவப்படத்தின் முன் வைத்து ஒரு டம்ளரில் பாலையும் வைத்து விளக்கு ஏற்றி வைத்து கற்பூரம் ஏற்றியபின் அந்த படையல் தட்டை எடுத்து கொண்டுமயானத்திற்கு புரோகிதர் சகிதம் செல்ல வேண்டும். எரிந்து மீத முள்ள எழும்புகளை சேர்த்து மண்ணால் வடிவமைக்கப்பட்ட அந்த மனித உருவத்தின் மார்பினில்வைத்து. பால், தேன், தயிர், முதலியவற்றை எலும்புகளின் மீது தெளித்து ஓர் குச்சி கொண்டு எலும்புகளை ஓர் சிறிய குவளையில் சேகரித்து அதற்கு நீராட்டி எண்ணெய், பால், தயிர் இளம்நீர் அபிஷேகம் செய்து பின் ஒரு சிறிய மண்பாணையில் பச்சரிசி, பச்சபருப்பு போட்டு கிச்சடி செய்து மூன்று கருங்கல் மற்றும் படையலுடன் வைத்து பால் ஊற்ற வேண்டும். அதனை யாரும் உண்ணக்கூடாது. காக்கைகள் உண்ண அனுமதிக்கவேண்டும்.

இறந்தவர் உடலை சுமந்து வந்தவர்கள் தங்கள் தோள் பட்டைகளை இந்த பால் மூலம் தோள்களை சுத்தம் செய்து கொள்ள

19. உண்மையுள்ளவனுக்கு உபதேசம் தேவையில்லை.

வேண்டும். பின்பு எலும்புகள் உள்ள கலயத்தை எடுத்துக் கொண்டு அருகில் உள்ள ஆறு அல்லது கடலில் விட வேண்டும். புண்ணிய நதிகளில் விடுவது சாலச் சிறந்தது. இதனை தஸ்கரம் செய்வதற்கு முன்பே செய்துவிட வேண்டும். பின் வீடு திரும்பி ஸ்நானம் செய்யவேண்டும்.

**பாலுக்கு தேவையான பொருட்கள் :**

1. 2 சிறிய மூடியுடன் கூடிய குடுவை (ஒன்று கிச்சடி செய்ய : அடுத்தது எலும்புகள் சேகரிக்க)
2. கிச்சடி செய்வதற்கு தேவையான அரிசி, பச்சைபருப்பு, கோதுமை மாவு.
3. இறந்தவர் விரும்பி உண்ணும் உணவு வகைகள்.
4. குங்குமம், சந்தனம், பால், எண்ணெய், தேன், தயிர், இளநீர், ஊதுபத்தி, கற்பூரம், அரிசிமாவு, மூன்று கருங்கல், புஷ்பம்.
5. கிச்சடி செய்ய எருவாட்டி.
6. அவுல் கடலை. பழ வகைகள்.

**தஸ்கரம் :**

உயிர் பிரிந்து 10-ம் நாள் செய்யும் நிகழ்ச்சியாகும். இதில் குளம், முக்கியத்துவம். கருமம் செய்பவர் மூலமாக உடலைப் பிரிந்த ஆத்துமாவை தங்கள் முன்னோர்களுடன் பிண்டம் வைத்து சேர்த்து வைக்கும் நிகழ்ச்சி என்பர். இந்நிகழ்ச்சி ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானதாகும்.

பெண் கர்ப்பவதியாக இருந்தால் பிரசவத்திற்குப் பின் 13-ம் நாள் மாங்கல்யம் நீக்க வேண்டியது. அதுவரை பந்துக்கள் வீட்டிற்க்கு போகக்கூடாது. பந்துக்கள் யாரும் இவர்களுடைய வீட்டில் நீர் கூட அருந்தக் கூடாது.

ஒரு ஆண் மகன் உயிர் துறந்தால், அவன் வாரிசு அவனுக்கு பிண்டம் வைத்து படையல் வைத்து புரோகிதர் முன்னிலையில் முறையாகச் செய்யவேண்டும். உயிர் நீத்தவர் ஆணாக இருந்தால் அவரது மனைவியை விதவைப் பெண்கள் சூழ அழைத்து வந்து தலையிலிருந்து தண்ணீர் ஊற்றி அல்லது குளத்தில் மூழ்க செய்து அவ்வேளையில் மங்கலச் சின்னங்களை களையவேண்டும். பின் தாய் வீட்டு வெள்ளை நிற புடவை அணிவிக்க வேண்டும். இந்த நிகழ்ச்சிக்கு முன்னர் எல்லா சுமங்கலிப் பெண்களும் இப்பெண்ணின் முகம் பார்க்கவேண்டியது. வீட்டிற்கு வந்தபின் கண்ணாடியில் அவர் முகத்தை பார்க்க வேண்டும். அன்று மாலை வீட்டில் விளக்கு வைக்கும்போது வீட்டில் உள்ளவர்களைத் தவிர வேறு யாரும் அவ்விளக்கை பார்க்கக்கூடாது.

**தஸ்கரம் தேவையான பொருட்கள்**

1. பெரிய குடுவை கிச்சடி செய்ய 1
2. சிரிய குடுவை கிச்சடி செய்ய 11 அல்லது 13
3. தர்ப்பணம், பிண்டம் வைக்க; அரிசி மாவு, சுள்ளி, எள், படையல் இலைகள் 10. அதில் சிறிது அரிசி, காய்கறி, துவரம் பருப்பு (கொத்தவரை, கீரை) உப்பு, புளி, வெற்றிலை பாக்கு அதில் தட்சிணையுடன்
4. பிண்டம் வைத்து பூஜை செய்ய பால், பழம், தேன், கற்பூரம், ஊதுபத்தி, வாழை இழை - 2.
5. நவக்கிரக பூஜைக்கு வெற்றிலை கொட்டைபாக்குகள். 9

பதினோராம் நாள் வீட்டிற்கு வெள்ளையடித்து சுத்த புண்ணியா தானம் செய்ய வேண்டும்.

12-ம் நாள் சமையல் செய்து புரோகிதரை வரவழைத்து பிண்டங்கள் யாவும் கொடுத்து தானம் கொடுத்து காக்கைக்கு படையல் இலை வைத்து காக்கை உண்ட பின் போஜனம் செய்ய வேண்டும். பிற்பகலில் பங்காளிகளால் நெருங்கிய உறவினர்கள் பகடி கட்டப்பட வேண்டும். புரோகிதருக்கு புது வேட்டி துண்டு, குடை விசிறி காலணி கொடுத்து மரியாதை செய்து ஆசிபெற வேண்டும். பின் வினாயகர் ஆலயம் சென்று பூஜை செய்து வீடு திரும்ப வேண்டும்.

13-ம் நாள் சூதகக்காரர்கள் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் பெய்து உணவு உண்டபின் இந்நிகழ்ச்சி முடிவு பெறுகிறது. இத்துடன் கருமங்கள் யாவும் முடிந்தது.

**சிரார்த்தம் :**

பின்பு திம்மாசி, செம்மாசி, 11ம் மாதம் பர்ஸி, இறந்தது முதல் தலை தெவசம் வரை மாதம் தோறும் செய்யவேண்டும். தலை தெவசம் ஆன பிறகு பிரதி மாதம் அமாவாசை அன்று தர்ப்பணம் செய்யவும்.

தலை தெவசம் 11-ம் மாதத்தில் செய்யவேண்டும். மகாள்ய காலத்தில் முன்னோர்களுக்கு செய்யும் போது இறந்தவர்க்கும் சேர்த்து செய்யவேண்டும். தெவசம் அன்று அன்னம், பதார்த்தம், தயிர் குழம்பு, வடை, பாயாசம், பருப்பு, நெய், பழம், இவைகளைச் செய்து படைக்கவேண்டும். இதனால், இறந்த நமது முன்னோர் நம்மை மனமாற வாழ்த்துவர். நமது வாழ்வில் எவ்வித குறையும் இன்றி நாம் வாழலாம்.

**அறிந்து கொள்ள வேண்டியது.**

1. இறந்த ஆடவரை குளிப்பாட்டும் போது மனைவியையும் அருகில் வைத்து குளிப்பாட்டுகின்றனர். இது ஷத்திரிய வம்சத்தில் செய்வது இல்லை.
2. 10-ம் நாள் நிகழ்ச்சியில் பெண்ணின் மங்கலசூத்திரத்தை களைந்த பின் தாய் வீட்டுச்சேலையை அணிவித்தல் வேண்டும்.
3. இறந்தவர்களை மயானத்திற்கு எடுத்துச்செல்லும் போது தென்னை ஓலையை பயன் படுத்தக் கூடாது. வைக்கோலைத் தான் பயன்படுத்தவேண்டும்.
4. ஆண்களை தகனம் செய்யும்போது முகம் ஆகாயம் பார்த்தும் விதவைப் பெண்களுக்கு மட்டும். பெண்ணின் முகம் பூமியை பார்க்கும் படியும் இருக்க செய்ய வேண்டும்.
5. தலை தெவசம் இறந்தவர்க்கு 11-ம் மாதத்தில் செய்ய வேண்டும்.

**நல்ல கதி அடைய காஞ்சி பெரியவர் அருளிய அருள் வாக்கு**

நாம் வசிக்கும் இந்த உலகத்திற்கு மிச்சரலோகம் என்று பெயர். மிச்ரம் என்றால் கலந்தது என்று பொருள். சுகம், துக்கம் இரண்டும் கலந்தது இந்த உலகம். துக்கமே இல்லாமல் சுகம் மட்டும் உள்ள லோகம் சத்தியலோகம், வைகுண்டம், கைலாசம் ஆகியவை. சுகமே இல்லாமல் துக்கம் மட்டுமே உள்ள லோகம் நரகம்.

நம் சாஸ்திர முறைப்படி மற்ற லோகங்களைவிட இந்த பூலோகம்தான் உயர்ந்தது. இங்கிருந்து எந்த லோகத்திற்கு வேண்டுமானாலும் நாம் போகலாம். மற்ற லோகங்களுக்கு போய்விட்டால் இஷ்டப்படி அவ்விடத்தைவிட்டு போக முடியாது. நாமாக ஒன்றும் செய்ய முடியாது. தர்மராஜன் நம் புண்ணிய பாவத்திற்கு ஏற்றாற்போல் இவ்வளவு காலம் என்று எழுதி வைத்திருப்பான். அதுவரை அங்கு இருக்க வேண்டும். ஆனால் இங்கே ஒரு தனி ஸ்வாதந்திரியம் (சுதந்திரம்) உண்டு. இஷ்டம் போல் புண்ணியம் பண்ணலாம். பாவமும் பண்ணலாம். கையினால் பூஜையும் பண்ணலாம். பிறரை அடிக்கவும் செய்யலாம். நாக்கினால் பகவத் நாமாவை சொல்லலாம் அல்லது யாரையாவது திட்டலாம். இரண்டுக்கும் நமக்கு சக்தி இருக்கிறது. இப்படி ஒவ்வொரு இந்திரியத்துக்கும் இரண்டுவிதமான சக்தியை பகவான் கொடுத்திருக்கிறார்.

இந்த ஸ்வாதந்திரியம் மற்ற இடங்களில் இல்லை. அவையெல்லாம் போக பூமியில். மாடாக பிறந்தால் புண்ணியமோ பாவமோ பண்ண முடியுமா தேவர்களும் மாட்டைப் போன்றவர்கள்தான். இந்த லோகத்தில் கர்மனுஷ்டானம் செய்து நல்ல கதி அடையலாம். தேவலோகத்தில் அது முடியாது. இது உற்பத்தி ஸ்தானம். உற்பத்தி சக்தி மனிதப் பிறவிக்குத்தான் உண்டு. மற்றவை வயிற்றுக்குச் சாப்பிடுகிற ஸ்தானம். எவ்வளவு புண்ணியம் பாவம் பண்ணியிருக்கிறோமோ அவ்வளவு பலன்களை அனுபவிக்கலாம். இந்த லோகத்தில் அனேக நல்ல காரியங்களை செய்து அவற்றை பகவானுக்கு அர்ப்பணம் செய்து ஆத்மஞானி ஆக வேண்டும்.

--- சுபம் ---

***இருந்தும் இல்லாமல் வாழ் - ராமலிங்க அடிகளார்***

## Letters to the Editor

From
**T.C.MOHAN SINGH,** President, North Chennai Branch
Addressed to **The State President, Bondil Association,** 38/40, Kuppu Muthu St.Chennai-5.

I have just received copy of Bondil Magazine and gone through and I have the following comment:

1. Though I was a member, since the inception of the North Chennai Branch, I have come across to see the present Magazine in which the printing and publication of newly wedded couple photos were excellent and good appearing.

2. This is the first time, I am seeing that those members,' whose daughters/sons marriages were fixed after publishing their names through Bondil Magazine, such names were also published for our members information This is excellent job done by Mr.Babu Govind Singh. Hats off to him.

3. Coming to the Bridegroom/Bride list side, groupwise list such as Doctors, Sevvai Dosam, Legally divercee and others. This is a good job done to some extent. But I have few words to comment, when you are able to publish group wise list as mentioned above, it is suggested the following group may be created apart from the above group.

**PROFESSIONALS: B.E/M.E/M C A/M B A/C A etc.**
**GRADUATES : B.A/B.Sc./B.Com/B.B.A and so on. This is purely my suggestion.**

4. The printing of letters and presentation of the matters were eye catching and beautiful.

5. Finally, one more request, in Bondil Magazine, you have printed Head Qrs. and District representatives contact address in Tamil. Since our members are spread in all Southern States, to know them well, the executive members address, it is advisable to print the address in English to enable to read all section of the Members. Editor : This is a laboureous job, what we have done. Thanks for your comments:

*******

**Letter from A. Nagaraj Singh, Bondili Assn. Kavali A P. addressed to the State President Bondil Assn.Chennai.**

Recently we have conducted a programme in connection with the Kartheeka Mosam Day. In that function, I have explained and given your activities and conducting marriage melas at Chennai and Coimbatore. Our people asked us to conduct such programmes for our community people at Kavali. Now we are following your foot prints for conducting such programmes in future. NAGARAJ SINGH. Editor : Thanks for your comments, we will co-operate to conduct such melas in your place.

திருச்சி கிளை தலைவர் பெரியவர் திரு. B. மகா தேவ் சிங் அவர்களின் பேத்தி செல்வி மோனிஷா H. அவர்களுக்கு 09.01.2010 அன்று திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் மத்திய உள்துறை அமைச்சர் உயர்திரு. ப.சிதம்பரம் அவர்களால் B.B.A. பட்டம் வழங்கப்பட்டது. திருச்சி மேயர் திருமதி. சுஜாதா மற்றும் கல்லூரி முதல்வர் Dr. (SR) சற்குணா அவர்கள் உடன் இருக்கிறார்கள். செல்வி மோனிஷா, H. மேலும் பல உயரிய பட்டங்களை பெற்று வீட்டிற்கும், தாய் நாட்டிற்கும் பெருமை சேர்த்திட பொந்தில் தலைமை சங்கம் வாழ்த்துகிறது.



**தங்க மனிதர் - முதுமையிலும் இளமை**

திருச்சி மாநகர பொந்தில் சங்க கிளைத் தலைவர் திரு. பா. மகா தேவ் சிங் 82 வயதினை கடந்தவர் 20.02.2010 மயிலாடுதுறை A.V.C. கல்லூரியில் நடந்த 80 வயது முதியோர் தடகள போட்டியில் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் முதலாவதாக வந்து தங்கபதக்கத்தையும், தட்டு எரிதல், குண்டு எரிதல் போட்டியில் இரண்டாவதாக வந்து வெள்ளி பதக்கத்தையும் பெற்றுள்ளார்கள் 70 வயதை கடந்தவர்கள் நடக்க கஷ்டப்படும் வேளையில் 80 வயதை கடந்த இவர் 100 மீட்டர் ஓடி தங்கப் பதக்கம் வெல்வது ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் அபிராமி அம்பாள் அருள் பெற்றதால் தான் இச் சாதனையை செய்ய முடிந்தது, 60 வயது முடிந்தவர்களுக்கான ஷஷ்டியப்த பூர்த்தி, திருமணங்களை நிறைய பேருக்கு அன்னார் முன்னின்று நடத்தியுள்ளார்கள் அன்னார் நூறாண்டுகளுக்கு மேல் வாழ்ந்து, சாதனைகள் தொடர்ந்து செய்திட சங்கம் வாழ்த்துகிறது.



## Magazine Donors

| | | |
|---|---|---|
| 1. | B.Jayachandra Singh,Chennai-17 | 10001 |
| 2. | V J Mohan Singh, Perundurai | 10001 |
| 3. | Coimbatore Branch | 6000 |
| 4. | Dr.BKC.Mohan Prasad ,Madurai | 5000 |
| 5. | M Rathan Singh. Madurai | 5000 |
| 6. | H Vimal Singh. Srivilliputhur | 3000 |
| 7. | Prema Babu Govind Singh. Ch 14 | 2500 |
| 8. | K V Jai Singh Chennai 12 | 2500 |
| 9. | P Ram Singh Pallavaram | 2000 |
| 10. | Dr M Ramakrishna Singh Ch-37 | 2000 |
| 11. | K Sundar Singh Srivilliputhur | 2000 |
| 12. | R N Shanker Singh Madurai | 2000 |
| 13. | B Jai Singh Chennai-4 | 2000 |
| 14. | A B Tagore Chennai 88 | 1500 |
| 15. | P Ramkumar Chennai 91 | 1500 |
| 16. | V.J.Raghubir Singh, Chennai 62 | 1500 |
| 17 | R.Sathyanarayan Lal, Chennai-4 | 1500 |
| 18. | S Thyagaraj Singh Chennai 62 | 1201 |
| 19 | Smt.Samyuktha Teeka Singh, Chennai | 1001 |
| 20 | R.G.Rajendra Singh, Chennai-5 | 1001 |
| 21 | G.Rajendra Babu Singh,Chennai 33 | 1001 |
| 22 | J.Lakshman Pyara, Chennai-2 | 1001 |
| 23 | Vijayakumar Srivatsava,Chennai 37 | 1001 |
| 24 | R.Kesavaram Singh, Pallipalayam | 1000 |
| 25 | J.Ram Pyaralal, Chennai-57 | 1000 |
| 26 | A.Narayan Singh, Chennai 71 | 1000 |
| 27 | Dr.K.Ripum Archana Singh, Guntur | 1000 |
| 28 | Bhavani Singh, Thakur, Hydrabad | 1000 |
| 29 | B.Ramakrishna Lal, Chennai 83 | 1000 |
| 30 | M.Jagadeesh Lal, Chennai 23 | 1000 |
| 31. | Chennai Sub-Urban Branch | 1000 |
| 32. | Vellore Branch | 1000 |
| 33. | South Chennai Branch | 1000 |
| 34. | North Chennai Branch | 1000 |
| 35. | Trichy Branch | 1000 |
| 36. | Smt R Vimala Bai Chennai 12 | 1000 |
| 37. | Smt J Gulabi Bai Chennai 5 | 1000 |
| 38 | C Jayachandran Vepery | 1000 |
| 39. | D Sudhanthar Singh Purasaiwakkam | 1000 |
| 40. | K.Govardhan Singh,Bangaluru | 1000 |
| 41. | K S Jagadish Chander Chennai 42 | 1000 |
| 42. | K Mahesh Kumar Singh Ch 62 | 1000 |
| 43. | R Durga Singh Pondicherry | 1000 |
| 44. | P Padmini Chennai 5 | 1000 |
| 45. | K Sathya Narayana Kapoor, Hydrabad | 1000 |
| 46. | S Narendar Singh Bangalore | 1000 |
| 47. | R C B Singh Kavali A P. | 1000 |
| 48. | R Mohan Singh Chennai 5 | 1000 |
| 49 | G Janardhan Singh Ambur | 1000 |
| 50. | H.Rajaram Singh, Tiruvannamalai | 1000 |
| 51 | G.P.Trivedi, Bangalore | 1000 |
| 52 | B.Mahadev Singh, Trichy | 1000 |
| 53 | R.Jambukeshwarlal, Chennai-118 | 1000 |
| 54 | T.Ram Rathan Singh, Warrangal A P | 1000 |
| 55. | Sundari Bai Chennai 114 | 1000 |
| 55. | LBalaji Singh, Chennai-17 | 750 |
| 56 | K Radhakrishna Singh Chennai 75 | 700 |
| 57 | K Pandi Singh Chennai 11 | 606 |
| 58 | P.Hari Singh, Chennai 50 | 601 |
| 59 | R Anantharam Singh Bangalore | 600 |
| 60 | R Shankar Singh Madurai | 600 |
| 61 | R Chandra Mohan Singh Ch 87 | 600 |
| 62 | R Hari Singh Nellore | 600 |
| 63 | G Kesavan. Gobichetypalayam | 600 |

| | | |
|---|---|---|
| 64 | Gopal Vittal Chennai 5 | 600 |
| 65 | R.Ranjith Singh, Chennai 43 | 600 |
| 66 | M.Heeralal Singh, Vijaywada | 600 |
| 67 | C.Bhoopal Singh, Chennai 83 | 600 |
| 68 | R Rajendra Singh Mumbai | 575 |
| 69 | M.Sardar Bhagavath Singh, Tiruchy | 550 |
| 70 | K Bharath Singh Rajapalayam | 501 |
| 71 | S Dharam Singh Chennai 23 | 501 |
| 72 | B Premraj Singh Tiruninravur | 501 |
| 73 | R Lal Singh Chennai 5 | 501 |
| 74 | C Kalyan Ram Chennai 4 | 501 |
| 75 | B Shravan Singh Bangalore 82 | 501 |
| 76 | B Yuvaraj Singh Salem | 501 |
| 77 | M Rajaram Singh Madurai | 501 |
| 78 | B.Nidyanand Singh, Trichy | 501 |
| 79 | M.B.Krishna Singh, Chennai 97 | 500 |
| 80 | G Kannan Singh Perambalur | 500 |
| 81 | K Jayakumar Chennai 112 | 500 |
| 82 | R Jayaprakash Chennai 94 | 500 |
| 83 | J Arjun Singh Vijayawada | 500 |
| 84 | B Kesar Singh Madurai | 500 |
| 85 | R Loknath Singh Nellikuppam | 500 |
| 86 | Smt Geetha Bai Chennai 16 | 500 |
| 87 | G Sivalal Babu Coimbatore | 500 |
| 88 | D Surendranath Singh Madurai | 500 |
| 89 | R Giridhar Singh Madurai | 500 |
| 90 | E Karunkumari Chennai 56 | 500 |
| 91 | G B Raja Bai Gobichettypalayam | 500 |
| 92 | R Rajendra Prasad Karur | 500 |
| 93 | H Jaya Singh Coimbatore | 500 |
| 94 | M Nagaraj Singh Chennai 41 | 500 |
| 95 | C Manoj Kumar Singh Villupuram | 500 |
| 96 | G Sundar Singh Villupuram | 500 |
| 97 | R Satheesh Villupuram | 500 |
| 98 | T C Sundar Singh Chennai 15 | 500 |
| 99 | V J Rajendar Singh Chennai 1 | 500 |
| 100 | N Ramakrishna Singh Chennai 21 | 500 |
| 101 | K Shanthi Bai @ Usha Porur | 500 |
| 102 | Bharathy Ram Singh Chennai 72 | 500 |
| 103 | Sundar Lal Chennai 24 | 500 |
| 104 | T Krishnakumar Singh Chennai 49 | 500 |
| 105 | C Chandra Mohan Pondicherry | 500 |
| 106 | K Gajendra Singh Chennai 73 | 500 |
| 107 | N Jayapal Singh Veppampattu | 500 |
| 108 | B Suresh Kumar Singh Nellikuppam | 500 |
| 109 | Gita Ram Mohan Singh Coimbatore | 500 |
| 110 | G Kishan Singh Chennai 74 | 500 |
| 111 | Radha Bai Narayan Coimbatore | 500 |
| 112 | R Rajkumar Singh Chennai 112 | 500 |
| 113 | Smt R Heera Bai Chennai 12 | 500 |
| 114 | B Muniram Singh Chennai 53 | 500 |
| 115 | Dr.Suresh Chennai 45 | 500 |
| 116 | S Shanthi Singh Mathur | 500 |
| 117 | T Agalya Bai Chennai 82 | 500 |
| 118 | M Ananda Swaroop Korattur | 500 |
| 119 | K G Krishna Singh Chitlapakkam | 500 |
| 120 | T C Ramdayal Singh Chennai | 500 |
| 121 | Smt Rajeshwari Bai Perambalur | 500 |
| 122 | R Rajendra Singh Pudukottai | 500 |
| 123 | Smt M Sarojini Bai Coimbatore | 500 |
| 124 | R Mahadev Singh Vellore | 500 |
| 125 | R Bhagavath Singh Chennai 5 | 500 |
| 126 | L Sardar Singh Pallikaranai | 500 |
| 127 | M Mohan Lal Vandalur | 500 |
| 128 | K Hariram Singh Porur,Chennai 116 | 500 |

| | | |
|---|---|---|
| 129 | M Roop Singh Avadi | 500 |
| 130 | S Ganesh Singh Chennai 5 | 500 |
| 131 | K Parthiban Singh Virudachalam | 500 |
| 132 | N Tukkaram Singh Nellore | 500 |
| 133 | Y Sudhakar Singh Nellore | 500 |
| 134 | Gomathy Milap Singh Madurai | 500 |
| 135 | V B Singh Porur Chennai 116 | 500 |
| 136 | P Siva Kumar Singh Coimbatore | 500 |
| 137 | L Rajendar Singh Chennai 88 | 500 |
| 138 | N Jayachandar Singh Chennai 102 | 500 |
| 139 | D Ram Singh Kovur A P | 500 |
| 140 | S Ravindran Tirupur | 500 |
| 141 | A Pragadeeswar Singh Tirupur | 500 |
| 142 | C K Rajaram Singh Tirupur | 500 |
| 143 | Smt A Indira Bai Tirupur | 500 |
| 144 | D Mahendar Singh Tirupur | 500 |
| 145 | C Raja Singh Chennai 15 | 500 |
| 146 | P Jeganath Singh Chennai 82 | 500 |
| 147 | M Duleep Kumar Chennai 20 | 500 |
| 148 | M Shankar Singh Akela Chennai 26 | 500 |
| 149 | R Renganath Prasad Chennai 78 | 500 |
| 150 | G Nara Singh Chennai 16 | 500 |
| 151 | G Chandra Bagawan Singh Cudapah AP | 500 |
| 152 | D.Narayana Singh, Vaniyambadi | 500 |
| 153 | N.Balaji Singh,Chennai 26 (SBI) | 500 |
| 154 | K Kishore Singh Chennai 5 | 500 |
| 155 | Yuvaraj Singh Mangadu | 500 |
| 156 | Udayakumar Chennai 5 | 500 |
| 157 | Ramesh Vizag | 500 |
| 158 | D.Sankar Singh, Pudukottai | 500 |
| 159 | M Kesav Singh Chennai 11 | 500 |
| 160 | Manoj Krishna Singh Chennai 24 | 500 |
| 161 | Smt Suryavathi Bai Chennai 112 | 500 |
| 162 | Sundari Bai Chennai 114 | 1000 |
| 163 | G Mahesh Kumar Singh Chennai 34 | 500 |
| 164 | B Govind Kiran Singh Chennai 5 | 500 |
| 165 | N Mahendranath Singh Chennai 83 | 500 |
| 166 | C K Gopal Singh Madurai | 500 |
| 167 | E Hari Singh Tiruthani | 500 |
| 168 | H J Ravindranath Singh Chennai 83 | 500 |
| 169 | R Balram Chennai 49 | 500 |
| 170 | G.Harikrishna Singh,Chennai 118 | 500 |
| 171 | P.SekarSingh,Srivilliputhur | 500 |
| 172 | Smt.R.Saraswathi, Pozhichalur | 500 |
| 173 | L.Gajaraj Singh, Kallakurichi | 500 |
| 174 | B.Mahendra Singh, Hydrabad | 500 |
| 175 | Smt. B. Sarojini Bai, Chennai-16 | 500 |
| 176 | T.Sivakumar Singh, Hosur | 500 |
| 177 | Anandhan, Chennai 118 | 500 |
| 178 | M. Gowri Shankar, Chennai 5 | 500 |
| 179 | J.Krishna Singh, Avadi | 500 |
| 180 | R.Narayana Giri, Jeeyarpuram | 500 |
| 181 | J.Gajendra Singh, Krishnagiri | 500 |
| 182 | Shankar Prasad, Kodungaiyur | 500 |
| 183 | M. Balaji Singh, Nellore | 500 |
| 184 | K.Gopi Singh, Periya Ilayanagaram | 500 |
| 185 | D.Sajjanraj Singh, Chennai-16 | 500 |
| 186 | R. Mothiram Singh, Chennai 4 | 500 |
| 187 | R.Kasiram Singh, Madurai | 500 |
| 188 | Smt. G.Sabitha, Chennai-2 | 500 |
| 189 | K.Jayaprakash Singh, Bangaluru | 500 |
| 190 | H.Sairam Singh, Chennai-78 | 500 |
| 191 | V.Narayan Singh, Chennai-53 | 500 |
| 192 | L.Anantharam Singh, Chennai-2 | 500 |
| 193 | T.Balaji Singh, Chennai-12 | 500 |
| 194 | S.Narayan Singh, Madurai | 500 |
| 195 | B.Gurucharan Singh, Chennai-37 | 500 |
| 196 | U.Lakshman Singh, Mangadu | 500 |
| 197 | V.Mohan Singh, Kavali A P | 500 |
| 198 | G.Balaji Singh, Ranipet | 500 |
| 199 | R.Sundar Singh, Chennai-37 | 500 |
| 200 | J.Devi Singh, Pudukottai | 500 |
| 201 | Ramesh Babu Singh, Coimbatore | 500 |
| 202 | N.Ramesh Babu, Coimbatore | 500 |
| 203 | R Eknath Singh Chennai 5 | 500 |
| 204 | B Yuvaraj Singh Chennai 82 | 500 |
| 205 | Sanjeev Singh Bijapur | 500 |
| 206 | R Vijayakumar Singh Chennai 106 | 500 |
| 207 | B T Arjun Singh Madurai 7 | 500 |
| 208 | Smt K V Uma Devi Chennai 5 | 500 |
| 209 | C Shyam Singh Chennai - 14 | 500 |
| 210 | K Ramachandra Singh. Tiruvotriur | 500 |
| 211 | Mega Raj Singh, Tirupati AP | 500 |
| 212 | R Hari Singh Arakonam | 500 |
| 213 | S Sudhakar Villupuram | 500 |
| 214 | B Rathan Singh Chennai 82 and | 500 |
| 215 | B Inder Singh Chennai 20 | |
| 216 | Smt Leelavathi Sunder Singh Ch 78 | 500 |
| 217 | Pyare Chand, Bangalore | 500 |
| 218 | C Satheesh Singh Chennai 59 | 500 |
| 219 | Kuber Singh Chennai73 | 500 |
| 220 | Sura Singh, Chennai 64 | 500 |
| 221 | K Shankar Singh Choolaimedu | 500 |
| 222 | Smt B Padma Bai. Ambur | 500 |
| 223 | Ramesh Chander Choolai | 500 |
| 224 | Ashok Kumar Singh Chennai 45 | 500 |
| 225 | Smt R Lakshmi Bai Chennai 62 | 500 |
| 226 | B Ramachandra Singh Chennai 20 | |
| 227 | Saravanan Singh Chennai 29 and | 550 |
| 228 | Raghuram Singh Chennai 34 | |
| 229 | A Prithviraj Singh Pondicherry | 500 |
| 230 | Smt K Sarojini Arjun Kazipet | 500 |
| 231 | B Lakshman Singh Bangalore 37 | 500 |
| 232 | J Karanchand Mohan Singh, Uthangarai | 500 |
| 233 | E Devi Singh Uthangarai | 500 |
| 234 | Dr Omprakash D Dodmani Sholapur | 500 |
| 235 | Gopal Singh Raichur | 500 |
| 236 | H Balaji Singh Madurai | 500 |
| 237 | R Parasuram Singh Tirunelveli | 500 |
| 238 | P R Babu Prathap Singh Bangalore | 500 |
| 239 | K Prithviraj Singh Chennai 24 | 500 |
| 240 | B Raja Singh Chennai 602024 | 500 |
| 241 | R Shyam Sundar Singh Vellore | 500 |
| 242 | Datta Narayan Singh Hyderabad | 500 |
| 243 | D Gajendra Singh Chennai 44 | 500 |
| 244 | J Hari Singh Chennai 37 | 500 |
| 245 | H Baldev Singh Tiruchy | 500 |
| 246 | Datta Narayan Singh Hyderabad | 500 |
| 247 | D Gajendra Singh Chennai 44 | 500 |
| 248 | J Hari Singh Chennai 37 | 500 |
| 249 | H Baldev Singh Tiruchy | 500 |
| 250 | S Babu Singh Karur | 500 |
| 251 | Smt Chandra Bai Mettur Dam | 500 |
| 252 | Smt Radha Bai Tirupur | 500 |
| 253 | R Shanker Das, Gobichettipalayam | 500 |
| 254 | B Nagendra Singh Coimbatore | 500 |
| 255 | R Satheesh Singh Coimbatore | 500 |
| 256 | R Balaji Singh Tirupur | 500 |
| 257 | Meena Vijayakumari P N Palayam | 500 |
| 258 | K Ashok Lal Chennai 50 | 500 |
| 259 | G M Singh Chennai 28 | 500 |
| 260 | R Prakash Lala Ranipet | 500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 248 | B Prathap Chennai 107 | 500 | 275 | M.Prakash,, Moongilthuraipattu | 500 |
| 249 | B Krishna Singh New Perungalathur | 500 | 276 | B.Gajendra Singh, Virudhachalam | 500 |
| 250 | R Balaji Singh @ Baba Bangalore | 500 | 277 | N.Maniram Singh, Wallajapet | 500 |
| 251 | Dr D Premakumari Chennai 93 | 500 | 278 | B.Leela Bai, Chennai 118 | 500 |
| 252 | D Suresh Kumar Chennai 92 | 500 | 279 | N.Kumar Singh, Bengaluru | 500 |
| 253 | M B Thulja Ram Singh Chennai 92 | 500 | 280 | L.Sundari Bai, Chennai-91 | 500 |
| 254 | N.Ravichander Singh, Salem | 500 | 281 | K.R. Dhan Singh, Melur | 500 |
| 255 | R.Kapil Dev Singh, Salem | 500 | 282 | S.Jayakumar Singh, Chennai 112 | 500 |
| 256 | H.J.Vikram Singh, Salem | 500 | 283 | L.Jhansi Rani, Chennai 12 | 500 |
| 257 | J.Mothilal Singh, Salem | 500 | 284 | Hanuman Singh, Vijayawada | 500 |
| 258 | Ashok Singh,Salem | 500 | 285 | N.Janardhan Singh, Dindigul | 500 |
| 258 | K Mahendra Singh Tirukovilur | 500 | 286 | E.Surendar Singh, Chennai 24 | 500 |
| 260 | P Shanmuganath Singh Salem | 500 | 287 | L.R.C. Singh, Ottapalam | 500 |
| 261 | K Baskar Singh Chennai 75 | 500 | 288 | T.Mohabath Singh, Kovur A P | 500 |
| 262 | M.Viswanath Singh, Chennai 38 | 500 | 289 | J.Manohar Singh, Chennai 57 | 500 |
| 263 | K.Ram Singh, Coimbatore | 500 | 291 | R.Selvi Bai, Neyveli | 500 |
| 264 | R.Vatsala Bai, Pattabhiram | 500 | 292 | B.Venugopal Singh, Nellore AP | 500 |
| 265 | D.P.Sundar Singh, Tiruchy | 500 | 293 | Manohar Singh, Coimbatore | 500 |
| 266 | Upendrakanth Singh, Hydrabad | 500 | 294 | P.J.Ravindran, Chennai-14 | 500 |
| 267 | R.Bagavan Singh, Chennai 37 | 500 | 295 | K.Chakku Bai, Nasik | 500 |
| 268 | A.Ramesh Singh, Chennai 53 | 500 | 296 | K.Dharani Singh, Chennai | 200 |
| 269 | A.Gopinath Singh, Tirunelveli | 500 | 297 | T.C.Nisha. Chennai-600091 | 500 |
| 270 | R.Rathan Singh, Mayavaram | 500 | 298 | D.Rajendran, Jeeyarpuram | 500 |
| 271 | G.Rusthum Singh, Vellore | 500 | 299 | H.Mohan Singh, Coimbatore | 500 |
| 272 | G.Sureshkumar Singh,Chennai 110 | 500 | 300 | K.Bhanumathi Bai,Erode | 500 |
| 273 | S.Gopinath, Chennai-14 | 500 | 301 | G.Chandraban Singh, Mayiladuthurai | 500 |
| 274 | L.Ravinder Singh, Chennai-117 | 500 | 302 | R.Kishore Singh, Chennai-5. | 500 |

## During the past three months the following marriages were fixed. We Wish them and pray God to give prosperity, better future & peaceful life

| | | |
|---|---|---|
| 1. P.Aanad Singh | S/o.D.L.Ramchandra Singh | Chennai-19 |
| 2. Arun Singh | S/o.Chandramohan Singh | Pondicherry |
| 3. N.Krishnakumar | S/o.R.Narayana Giri | Tiruchy |
| 4. D.Ranjith Singh | S/o.J.Devi Singh . | Pudukottai |
| 5. K.Devendra Singh | S/o K.Kishore Singh | Chennai |
| 6. R.Prasanth | S/o.Smt.Indra Ranjith | Salem |
| 7.G.R.ShailendraSingh | S/o.R.G.Rajendra Singh . | Chennai |
| 8. S.Sudhakar | S/o.N.Sarthar Singh | Villupuram |
| 9. M.Vinodkumar | S/o R.Mohan Singh | Chennai |
| 10.S.J.Yogesh Singh | S/o.K.S.Jagadishchander Singh | Chennai |
| 11. Jambukeshwar Singh | S/o. Dev Singh | Tirunelveli |
| 12.Neetu | D/o.D.Madhan Singh | Chennai |
| 13.Devipriya | D/o.Heera Singh | Ambathur |
| 14.P.Radha | D/o.R.Parasuram Singh | Tirunelveli |
| 15.S.Sudha | D/o.Sankar Singh | Pudukottai |
| 16.N.Ashalatha | D/o.Thukkaram Singh | Nellore A.P |
| 17.Rajalakshmi | D/o.Saraswathi Bai | Pozhichalur |
| 18.Banu Bai | D/o.Balaji Singh | Buchireddypalem A.P |
| 19.G.Priya | D/o.B.Gajendra Singh | Virudhachalam |
| 20. Narmadha | D/o. Balaji Singh | Chennai. |

**Please Contact for Marriage Alliance Information Cell : 9444070048 / 9940217113)**

**உங்கள் இல்லங்களிலும் இறைவன் திருவருளாள் திருமணம் இனிதே நடைபெற பொந்தில் தலைமைச் சங்கத்தினை தொடர்பு கொள்ளவும் :**

**(38/40, குப்பமுத்து தெரு, திருவள்ளிக்கேணி, சென்னை – 5. குழல் பேசி : 9444070048 / 9940217113)**

*ஆணவமாய் பேசினால் அன்பை இழப்பாய்*

# ஆன்மீகம்

## பெண்களுக்குரிய எளிய சாஸ்திர வழிகள்

பெண்களுக்கு என்று சிறப்பு சாஸ்திரங்கள் உண்டு. கணவனோடு சேர்ந்திருக்கும்போது மல்லிகை, முல்லை போன்ற பூக்களைத்தான் சூட வேண்டும். கனகாம்பரம், நீலம்பரம் போன்ற பூக்கள் கூடாது.

குளிக்கும்போது மஞ்சள் அவசியம் பூச வேண்டும். மூக்குத்தி அவசியம் அணிய வேண்டும், கல்வாழை விசிறி போன்ற மூக்குத்தி அணிவது சிறப்பு.

கால் பெரு விரலுக்கு அடுத்த விரலில் மெட்டி அவசியம் (வெள்ளியில் செய்தது) அணிய வேண்டும்.

மாத விலக்கின்போது தலையில் பூ வைக்கக் கூடாது, சமையல் அறைக்குள் செல்லக் கூடாது. உணவு பரிமாறக் கூடாது.

திருமணமான பெண் இரவில் கருப்பு, கடல் நீலம், ரத்தச் சிவப்பு ஆடைகளை அணியக் கூடாது, வெளிறிய வண்ண சேலைகள்தான் உடுத்த வேண்டும்.

அதிகாலையில் நீராடி, உறங்கும் கணவனை, குரல் கொடுத்து எழுப்பி, தன் முகத்தில் விழிக்க வைக்க வேண்டும். இவற்றால் வீட்டில் லஷ்மி கடாட்சம் பெருகும்.

### தீர்த்தங்களில் முதலில் கால் வைக்கக் கூடாது !

முற்காலங்களில் எல்லா கோயில்களிலும், புனித தீர்த்தம் என்று குளம் வெட்டி வைத்திருப்பார்கள். இவற்றை மகேச தீர்த்தம், இந்திர தீர்த்தம், சிவகங்கை என்று அந்தந்த தல புராணங்களுக்கு ஏற்பப் பெயரிட்டிருப்பார்கள். இத்தகைய தீர்த்தங்களில் எடுத்த எடுப்பில் காலை வைக்கக் கூடாது. முதலில் குனிந்து கைகளால் நீரை எடுத்து தலை மீது தெளித்துக் கொள்ள வேண்டும் பின்னரே படிக்கட்டில் இறங்கி நீரில் காலை வைக்க வேண்டும் என்பது சாஸ்திரங்களில் தரப்பட்டுள்ள நியதி.

### இறப்பு வீட்டுக்குச் சென்று வந்தால் குளிக்கும் முறை

பாவங்களை நீக்குவதில் முதல் இடம் நீருக்கே அளிக்கப்பட்டுள்ளது, பிறப்பு, இறப்பு, தீட்டு நாட்களில் வெந்நீரில் குளிக்கக் கூடாது, இத்ததைகய வீடுகளுக்கு சென்று வந்தாலும் இதே விதிதான் பின்பற்றப்பட வேண்டும். வெந்நீரிக் குளியல் தூய்மைக் குறைவானது என்றும், வெந்நீரில் குளிப்பதால் தீட்டு போகாது என்றும் தர்ம சாஸ்திரம் கூறுகிறது.

நன்றி : **ஞான ஆலயம்**

### கணவனுக்கும், மனைவிக்கும் குறுக்கே செல்லக் கூடாது !

பசுவுக்கும், கன்றுக்கும் இடையில் செல்லக் கூடாது. குறுக்கே இருந்தால் பசுவையோ, கன்றையோ, தாண்டக் கூடாது. கணவனுக்கும், மனைவிக்கும் இடையே குறுக்காக செல்லக் கூடாது, கோயிலில் பிரதட்சணம் செய்யும் போது கொடி மரத்துக்கும், நந்திக்கும் இடையே செல்லக் கூடாது. கொடி மரத்தின முன்னால் ஒருவர் சுவாமியை நோக்கி நமஸ்காரம் செய்யும் போது இடையே புகுந்து செல்லக் கூடாது. இவை தர்ம சாஸ்திரம் கூறும் அறிவுரைகள். சிலர் தெருக்களில் நடக்கும்போதும் வண்டி ஓட்டும் போதும் கோவில்களை கடக்கும் போது ஒற்றைக் கையால் நண்பனுக்கு வணக்கம் தெரிவிப்பது போல் தெய்வத்திற்க்கு வணக்கம் போடுவார்கள். இரண்டு கைகளால் நமஸ் கரிக்க வேண்டும்.

**ஜோதிடம் :**
**இவ்விதழில் 12 ராசிகாரர்களுக்கான பொதுவான குணங்களை வெளியிட எண்ணி இருக்கிறோம். மேஷ ராசிக்காரர்களுக்கான பொது குணங்கள் வருமாறு.**

(அசுவினி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம் முடிய)
மேஷ ராசியிரின் தனித் தன்மை

ஆவல் மிகுந்தவர்கள் அதிகாரம் செலுத்த ஆசைப்படுபவர்கள். குடும்பத்தின் மேல் அக்கறை காட்டும் திறன் அமையப்பெற்றவர்கள் துணிச்சலும் அச்சமின்மையும் இவர்களுக்குப் புகழை உருவாக்கும். எந்த செயலிலும் மனம் உவந்து பற்றோடு ஈடுபடுவார்கள். மனதில் உருவாகும் முடிவான கருத்துகளை எடுத்துரைப்பதில் வல்லவர்கள். கற்பனைத் திறத்தால் விதியை எதிர்த்து போராடும் தன்னம்பிக்கை நிறைந்த புண்ணிய சீலர்கள்.

கண்மூடித்தனம் சுயகௌரவம் பார்த்தல், பயணப் பாதையில் பாதை மாறும் சுபாவம், கோபம் பெருக்கெடுத்தால் அத்தனையும் மொத்தமாக வேரோடு சாய்க்கும் தீரம் பகை உணர்வை அடியோடு மறக்க இயலாத குணம் போன்றவை சில, மேஷ ராசிகாரர்களுக்கு நட்சத்திர தார தன்மைக்கு ஏற்ப காணப்படும். மேலே தெரிவித்தவை மார்ச் – 21லிருந்து ஏப்ரல் 20 வரை பிறந்தோருக்கும் பொருத்தமானது. மார்ச் 21 –லிருந்து 31ற்குள்ளாகப் பிறந்திருந்தால் 45 வயதிலிருந்து 56 வயதிற்குள்ளாக உடல்நிலையில் தொய்வு காணப்படும் 28 –ம் வயது அற்புதமானது என சில கோணங்களில் அறியமுடிகிறது. ஏப்ரல் – 1 –லிருந்து ஏப்ரல் 10 குள் பிறந்திருந்தால் சூரியன் நல்லதைச் செய்வார். ஏப்ரல் 11லிருந்து 20ற்குள் பிறந்திருந்தால் பொறுப்புமிக்க பதவிகள் வந்தடையும்.

நன்றி : **பண்டிட் எம்.ஏ.பி. பிள்ளை**

*வெட்டியாய் பேசினால் வேலையை இழப்பாய்*

அடுத்த இதழில் ரிஷப ராசி.....

ஹோலி பண்டிகை நல்வாழ்த்துகள்



# திரு. பூ. ராம்சிங்

துணை ஆட்சியர் (ஓய்வு)



12, அப்துல் ரசாக் தெரு.
பல்லாவரம், சென்னை – 600 043
தொலைபேசி – 22643951

ஹோலி பண்டிகை நல்வாழ்த்துகள்

# ராஜேஷ் டெக்ஸ்டைல்ஸ்









திருமதி/திரு. **கே. சங்கர் சிங்**

எண். 15, சூளைமேடு ஹை–ரோடு சென்னை – 94.
தொலைபேசி 23742449, 24720987
செல் 9884020987